இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 13-06-2024

# அதுவும் இதுவும் சேர்ந்திருந்தால்...?

தோற்ற அ.தி.மு.க. வேலுமணியும் தோற்ற பா.ஜ.க. தமிழிசையும் சேர்ந்து அழுது கொண்டிருக்கிறார்கள். 'அ.தி.மு.க.வும் - பா.ஜ.க.வும் சேர்ந்திருந்தால் தமிழ்நாட்டில் 35 இடங்கள் வெற்றி பெற்றிருப்பார்களாம்'. இரண்டும் இரண்டும் கணக்கில்தான் நான்கு ஆகும். அரசியலில் அது 0 கூட ஆகலாம். தேர்தல் என்பதே வெறும் கணக்கில் இல்லை. கொள்கையில், நிலைப்பாடுகளில்தான் இருக்கிறது.

**யாரும் யாரும் சேர்கிறார்கள், என்ன அடிப்படையில் சேர்ந்திருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே அதற்கு அரசியல் களத்தில் மதிப்பும் மரியாதையும் அமையும். எடப்பாடிக்கு விழுந்த வாக்குகளில் மோடி எதிர்ப்பு வாக்குகளும் இருக்கின்றன. பா.ஜ.க. வாங்கிய வாக்குகளில் அ.தி.மு.க.வுக்கு எதிர்ப்பு வாக்குகளும் உள்ளன. எனவே, இவற்றைச் சேர்ப்பதே அரசியல் அறியாத் தன்மை ஆகும்.**

2019 நாடாளுமன்றத் தேர்தலிலும், 2021 சட்டசபைத் தேர்தலிலும் அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் கூட்டணி அமைத்துத்தான் போட்டியிட்டன. கூட்டணியாகத் தான் தோற்றன. எனவே, அதுவும் இதுவும் சேர்ந்திருந்தாலும் தோல்விதான். பிரிந்து நின்றாலும் தோல்விதான்.

தி.மு.க. கூட்டணி 47 விழுக்காடு வாக்குகளைப் பெற்றுள்ளது. அ.தி.மு.க. கூட்டணி 23 விழுக்காட்டையும், பா.ஜ.க. கூட்டணி 18 விழுக்காட்டையும் பெற்றுள்ளது. அ.தி.மு.க.வின் விழுக்காட்டையும் பா.ஜ.க. விழுக்காட்டையும் கூட்டினால் 41 விழுக்காடுதான் வருகிறது. 47 ஐ தாண்டவில்லை. இதுகூட, தோற்ற அந்த இரண்டு கட்சிக்கும் தெரியவில்லை.

**அ.தி.மு.க.வை தனித்து நிற்க வைத்ததே பா.ஜ.க.வின் அகில இந்தியத் தலைமைதான். மோடி எதிர்ப்பு வாக்குகள் முழுமையாக தி.மு.க.வுக்குப் போய்விடாமல் பிரிக்கவும், சிறுபான்மையினர் வாக்குகள் முழுமையாக தி.மு.க.வுக்குப் போய்விடாமல் தடுக்கவும் பா.ஜ.க. உருவாக்கிய 'கள்ளக் கூட்டணி' தான் அ.தி.மு.க. அணி ஆகும்.**

"222 சட்டமன்றத் தொகுதி வாரியாக தி.மு.க. கூட்டணி அதிக வாக்குகள் பெற்றுள்ளது" என்று 'தி இந்து' ஆங்கில நாளிதழ் செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ளது. அதில், **நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 222 சட்டமன்றத் தொகுதி வாரியாக தி.மு.க. கூட்டணி அதிக வாக்குகள் பெற்றுள்ளது என்றும், 222 சட்டமன்றத் தொகுதிகளில் மற்ற கட்சிகளை காட்டிலும் தி.மு.க. கூட்டணிக்கே அதிக வாக்குகள் கிடைத்துள்ளது என்றும், 32 மக்களவைத் தொகுதிகளை உள்ளடக்கிய 192 சட்டமன்றத் தொகுதிகளில் முழுமையாக தி.மு.க. கூட்டணியே அதிக வாக்குகளைப் பெற்று சாதனை படைத்துள்ளது என்றும், திருவள்ளூர், தென்சென்னை, அரக்கோணம், பெரம்பலூர், கரூர், திருச்சி, கோவை, நாமக்கல், நீலகிரி, மதுரை, தென்காசி, தூத்துக்குடி மக்களவைத் தொகுதிகளில் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் அதிக வாக்குகளைத் தி.மு.க. கூட்டணி பெற்றுள்ளது என்றும் 'தி இந்து' சொல்லி இருக்கிறது.**

மக்களவைத் தேர்தல் வாக்கு விவரங்களின்படி 8 சட்டசபைத் தொகுதிகளில் மட்டுமே அ.தி.மு.க. முன்னணியில் இருக்கிறது. 3 தொகுதிகளில் பா.ம.க. அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது. 2 தொகுதிகளில் தே.மு.தி.க. வேட்பாளர்கள் கூடுதல் வாக்குகளைப் பெற்றுள்ளனர். பா.ஜ.க. எந்த சட்டமன்றத் தொகுதியிலும் கூடுதல் வாக்குகளை வாங்கவில்லை.

**தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் வரலாறு என்ன?**

1984 நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு தொகுதியிலும் 1989 தேர்தலில் 3 இடங்களிலும், 1991 தேர்தலில் 15 இடங்களிலும், 1996 தேர்தலில் 37 இடங்களிலும் போட்டியிட்டு, ஒரு தொகுதியில்கூட தமிழகத்தில் பா.ஜ.க. வெற்றி பெறவில்லை. பா.ஜ.க. முதன்முறையாக 1996 சட்டசபைத் தேர்தலில் ஒரு இடத்தில் வென்று, சட்டசபைக்குள் நுழைந்தது. 1998 நாடாளுமன்றத் தேர்தலில் 5 தொகுதிகளை பா.ஜ.க.வுக்கு ஒதுக்கினார் ஜெயலலிதா. 3 தொகுதிகளில் பா.ஜ.க. வென்றது. 1999 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்தது பா.ஜ.க. அந்த கூட்டணியில் 6 தொகுதிகள் ஒதுக்கப்பட, 4 இடங்களில் பா.ஜ.க. வென்றது. 2001 சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. 21 தொகுதிகளில் போட்டியிட்டு, 4 இடங்களில் வென்றது. அடுத்து அ.தி.மு.க.வுக்கு தாவிய பா.ஜ.க.வுக்கு 7 தொகுதிகளை ஒதுக்கினார் ஜெயலலிதா. அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி 40 தொகுதிகளிலும் படுதோல்வி அடைந்தது.

2006 சட்டசபைத் தேர்தலில் தனித்து போட்டியிட்டது பா.ஜ.க. 225 தொகுதிகளில் போட்டியிட்டு, 221 இடங்களில் டெபாசிட் இழந்தது. 2009 நாடாளுமன்றத் தேர்தலில் எந்த தொகுதியிலும் பா.ஜ.க. வெற்றி பெறவில்லை. 2011 சட்டசபைத் தேர்தல் 200க்கும் அதிகமான இடங்களில் பா.ஜ.க. தனி அணியாகப் போட்டியிட்டது. 198 தொகுதிகளில் டெபாசிட்டை இழந்தது. 2016 சட்டசபைத் தேர்தலில் 188 இடங்களில் போட்டியிட்டு 180 தொகுதிகளில் டெபாசிட் இழந்தது பா.ஜ.க. 2019 நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து 5 தொகுதிகளில் போட்டியிட்டது பா.ஜ.க. இந்தக் கட்சியும் முழுமையாகத் தோற்றது. அ.தி.மு.க. ஒரே ஒரு தொகுதியில் மட்டுமே வென்றது. 2021 சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்ட பா.ஜ.க. 4 இடங்களில் மட்டுமே வென்றது. இதுதான் பா.ஜ.க.வின் தோல்விச் சரித்திரம் ஆகும்.

பழனிசாமியின் அ.தி.மு.க. சரித்திரமும் தோல்விச் சரித்திரம்தான். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு பழனிசாமி, அனைத்துத் தேர்தல்களிலும் தோற்றே வந்துள்ளார். இதுதான் அவர் வாங்கிய தோல்விப் பட்டயங்கள்.

**நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி 21 தொகுதிகளில் டெபாசிட் இழந்துள்ளது. அ.தி.மு.க. கூட்டணி 8 தொகுதிகளில் டெபாசிட் இழந்துள்ளது. இதுதான் இவர்களது யோக்கியதை ஆகும்.**

**பூஜ்யமும் பூஜ்யமும் சேர்த்தால் கணக்கிலும் பூஜ்யம் ஆகுமே தவிர, ஒன்று ஆகாது. தேர்தலிலும் பூஜ்யம் ஆகுமே தவிர, ஒன்று ஆகாது. இதெல்லாம் பூஜ்யங்களுக்கு ஒன்றுமே புரியாது.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.6.2024) தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான ஃபின்லாந்து நாட்டு தூதர் கிம்மோ லாஹ்தேவிர்தா (Mr. Kimmo Lahdevirta) அவர்கள் சந்தித்துப் பேசினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சென்னையிலுள்ள ஃபின்லாந்து நாட்டின் கௌரவத் தூதர் சிதம்பரம், ஃபின்லாந்து தூதரகத்தின் கவுன்சிலர் சன்னா ஓரவா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2024) தலைமைச் செயலகத்தில், ஜப்பான் நாட்டில் நடைபெற்ற 2024 பாரா தடகள உலக சாம்பியன்ஷிப் போட்டியில் உயரம் தாண்டுதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற டி.மாரியப்பனுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 75 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, பயிற்றுநர் சத்யநாராயணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில்

## தூய்மைப் பணியாளர்களின் நலன் குறித்த ஆய்வுக் கூட்டம்!

### ஆணையத் தலைவர் எம்.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூன் 13–

தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத் தலைவர் எம். வெங்கடேசன் தலைமையில் தூய்மைப் பணியாளர்களின் நலன் குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் (11.06.2024) நடைபெற்றது.

நேற்று முன்தினம் (11.06.2024) தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத் தலைவர் எம். வெங்கடேசன் அவர்களின் தலைமையில் தூய்மைப் பணியாளர்களின் நலன் குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத் தலைவர் பேசியதாவது:–

மனிதக் கழிவுகளை அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வு சட்டம் 2013, பிரிவு 7ன்படி, எந்தவொரு நபரும், ஒப்பந்ததாரரும் அல்லது எந்தவொரு நிறுவனமும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு நபரையும் அபாயகரமான முறையில் கழிவு நீர் தொட்டியை சுத்தம் செய்வதற்கு ஈடுபடுத்தவோ அல்லது பணியமர்த்தவோ கூடாது. அவ்வாறு ஈடுபடுத்தினால், அந்த நபரின் மீது மேற்படி சட்டத்தின் பிரிவு 9ன்படி முதன் முறையாக மீறுபவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது 2 லட்சம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். இரண்டாவது முறையாக மீறுபவர்களுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது 5 லட்சம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விழிப்புணர்வுப் பணிகள் அனைத்து பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனைத்து களப்பணியாளர்களையும் பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்தும் நிலையினை உறுதி செய்து களப்பணியாளர்களின் நலனில் அக்கறையோடு இருக்க வேண்டும். மேலும், தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்தை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வழங்கிட வேண்டும். அனைத்து பணியாளர்களையும் காப்பீட்டு திட்டத்தில் சேர்ப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.



நாடாளுமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான நமது கொள்கைப் படை பெற்ற நாற்பதுக்கு நாற்பது – வரலாற்று வெற்றியைத் தொடர்ந்து – கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திருப்பெரும்புதூர் மக்களவைத் தொகுதியில், பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வென்ற கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்களை சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

### 2024 பாரா தடகள உலக சாம்பியன்ஷிப் போட்டியில்

# தங்கப் பதக்கம் வென்ற டி.மாரியப்பனுக்கு ரூ.75 இலட்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூன் 13-

2024 பாரா தடகள உலக சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற டி.மாரியப்பன் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 75 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்தினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2024) தலைமைச் செயலகத்தில், ஜப்பான் நாட்டில் நடைபெற்ற 2024 பாரா தடகள உலக சாம்பியன்ஷிப் போட்டியில் உயரம் தாண்டுதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற டி.மாரியப்பன் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 75 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கி, வாழ்த்தினார்.

விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

மேலும், மாநிலத்தில் அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை பெருநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து நன்கொடை பெற்று "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"யை உருவாக்கியது, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்திட தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**பாரா ஒலிம்பிக் தடகளப் போட்டியில் உயரம் தாண்டுதலில் தங்கப் பதக்கம் வென்ற டி.மாரியப்பன் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்குதல்**

கடந்த மே மாதம் 17 முதல் 25 வரை ஜப்பான் நாட்டின் கோபில் (KOBE) நடைபெற்ற 2024 பாரா தடகள உலக சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்த தமிழ்நாட்டு வீரர் த.மாரியப்பன் அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் 75 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை உயரிய ஊக்கத் தொகையாக வழங்கி வாழ்த்தினார்.

முன்னதாக, மாரியப்பன் அவர்களுக்கு 2019ஆம் ஆண்டு ஐக்கிய அரேபிய எமிரேட்ஸ் நாட்டின் துபாயில் நடைபெற்ற உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றதற்காக 30 இலட்சம் ரூபாய்க்கான காசோலை, 2020ஆம் ஆண்டு ஜப்பான் நாட்டின் டோக்கியோவில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றதற்காக 2 கோடி ரூபாய்க்கான காசோலை, 2023ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற ஆசிய பாரா போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றதற்காக 30 இலட்சம் ரூபாய்க்கான காசோலை, தாய்லாந்து நாட்டில் நடைபெற்ற International Wheelchair and Amputee Sports Federation போட்டியில் தங்கப் பதக்கம் வென்றதற்காக 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலை உயரிய ஊக்கத் தொகையாக தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, பயிற்றுநர் சத்யநாராயணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.